**சங்க ஏடு அறிவோம் - "இறைவெளிப்பாடு"**

## திருவிவிலியம் மட்டும் போதுமா?

ஒரு விபத்து என்றால், பாதிக்கப்பட்டவருக்கு உதவுவதைவிட அதை உடனே ஒளிப்பதிவு செய்து எப்படி பிறரோடு பகிர்வது என்பதில்தான் பெரும்பாலோர் ஆர்வம் காட்டுகின்றோம். செய்திப்பரிமாற்றத்தின் காலம் இது. உலகின் ஒரு மூலையில் நடக்கும் செய்தி ஒரு நொடியில் உலகின் மறுமுனைக்குச் சென்றடைகிறது. இச்சூழலில் இறை வெளிப்பாடு எப்படி நம்மை வந்தடைகிறது என்று எண்ணிப்பார்ப்பது மிகவும் அவசியமாகிறது.

## *இறைவார்த்தையும் திருவிவிலியமும்*

யூதமும் கிறித்தவமும் புனித நூல்களை அடிப்படையாகக்கொண்டு தோன்றிய சமயங்கள் அல்ல. மாறாக, வாழ்க்கை அனுபத்திலிருந்துதான் புனித நூல்கள் தோன்றின. இஸ்ராயேல் மக்களின் இறையனுபவத்திலிருந்து பிறந்ததுதான் அவர்களது திருநூல், பழைய ஏற்பாடு. அதேபோன்று, தொடக்க காலக் கிறித்தவர்களுக்கு உயிர்த்த கிறிஸ்துவில் கிடைத்த இறையனுபவத்தின் சாரம்தான் புதிய ஏற்பாடு. எனவே, இறைமக்களின் வாழக்கையிலிருந்து, இறையனுபவத்திலிருந்து பிறந்ததுதான் திருவிவிலியம் (பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்). எனவே, இறைவார்த்தையை எழுத்து வடிவம் கொண்ட திருவிவிலியத்திற்குள் மட்டும் அடக்கிவிட முடியாது. படைப்பிலும், மனித வரலாற்றிலும் கூட கடவுள் தம்மையே வெளிப்படுத்துகிறார் என்பதை இங்கு நாம் நினைவுகூறவேண்டும்.

கிறிஸ்து போதித்த நற்செய்தியானது திருத்தூதர்கள் வழியாக நம்மை வந்தடைந்திருக்கிறது. "கிறிஸ்துவின் வாய்மொழியாலும் அவரோடு நடத்திய வாழ்வாலும் அவர்தம் செயல்களாலும் தாம் பெற்றவற்றையும், தூய ஆவியின் தூண்டுதலால் தாம் கற்றவற்றையும் திருத்தூதர்கள் தம் வாய்மொழிப் போதனை, வாழ்வின் எடுத்துக்காட்டுகள், ஏற்படுத்திய அமைப்புகள் ஆகியவற்றின் வாயிலாக வழிவழியாக வழங்கினர். நிறைவாழ்வுச் செய்தியைத் திருத்தூதர்களும் அவர்கள் காலத்தில் வாழ்ந்த பிறரும் ஆவியின் ஏவுதலினால் எழுத்தில் வடித்துத் தந்தனர்" ("இறைவெளிப்பாடு," எண் 7). ஆனால், நற்செய்தி நூல்கள் எழுத்து வடிவம் பெற்ற பின்னும் வாய்மொழி மரபு மறையவில்லை. எழுதப்படாத செய்திகள் ஏராளமாய் வாய்மொழியாகப் பரவிவந்தன (யோவா 20:30; 21:25).

இவ்வாறு வாய்மொழியாகவோ எழுதப்பட்ட வார்த்தை வழியாகவோ தாங்கள் கற்றுக்கொண்ட மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் (காண் 1 தெச 2:12). தாங்கள் பெற்றுக்கொண்ட நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டுமென்றும் (காண். யூதா 3) திருத்தூதர்கள் கிறித்தவர்களை அறிவுறுத்தினர். அந்த வழி நின்று திருஅவை தன் படிப்பினை, வாழ்வு, திருவழிபாடு வழியாகத் தான் பெற்றுக்கொண்ட நற்செய்தியை பகிர்ந்து வருகிறது. திருஅவை தான் நம்புவதைத்தான் திருவழிபாட்டிலே வெளிப்படுத்துகிறது, கொண்டாடுகிறது; நம்புவதையே வாழ்கிறது (காண் “இறைவெளிப்பாடு**,”** எண் 8). *Lex orandi, lex credendi, lex vivendi* என்ற இலத்தீன் சொல்வழக்கு அதைத்தான் உணர்த்துகின்றது.

## *திருமரபும் திருவிவிலியமும்*

மரபு வழியே, வழி வழியாக நமக்கு வழங்கப்பட்டுள்ள உண்மைகளையும், சொற்களையும் தூய ஆவியின் துணையுடன் புரிந்துகொள்வதில் வளர்ச்சி ஏற்படுகிறது (“இறைவெளிப்பாடு**,”** எண் 8). மரபின் வழியாகத்தான் விவிலியத் திருமுறை (Canon of the Bible) நமக்குக் கிடைத்திருக்கின்றது. எந்தெந்த புத்தகங்கள் இறைவனால் ஏவப்பட்டவை, நம் நம்பிக்கைக்கு அவசியமானவை என்று மரபு வழியாகத்தான் திரு அவை கண்டறிந்திருக்கிறது; வறையரை செய்திருக்கிறது. இதுதான் திருவிவிலியம், இத்தனைப் புத்தகங்கள்தான் அதிலே அடங்கியிருக்கின்றன என்று மரபை ஆதாரமாக வைத்துதான் திரு அவை நமக்குச் சொல்கிறது.

கிறிஸ்துவும் தொடக்கக் கால கிறித்தவர்களும் பழைய ஏற்பாட்டை திருநூல் என்று போற்றினர். “புதிய எற்பாடு பழைய ஏற்பாட்டில் மறைந்திருக்கிறது; புதிய ஏற்பட்டில் பழைய ஏற்பாடு தெளிவாய்த்தோன்றுகிறது” (புனித அகுஸ்தினார்) என்று கண்டு, திரு அவையும் பழை ஏற்பாட்டை முழுவதுமாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. திருமரபிலிருந்துதான் திருவிவிலியத்தைப் பெற்றிருக்கின்றோம் என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே, எழுதப்பட்ட வார்த்தையை (திருவிவிலியத்தை) முழுவதுமாக திருமரபிலிருந்து பிரித்தெடுக்க முடியாது (“இறைவெளிப்பாடு**,”** எண் 8).

மேலும், திருவிவிலியத்தைச் சரியாக பொருள் கொள்வதற்கும் மரபு தேவை. எனவேதான் திரு அவைத் தந்தையர்களின் போதனைகளையும், கீழை (கிரேக்க) – மேலச் (இலத்தீன்) சபைகளின் வழிபாட்டு முறைகளையும் கற்க நம்மை திரு அவை தூண்டுகின்றது (எண் 8:23). மரபு வழி நின்று திருவிவிலியத்திற்குப் பொருள்கொள்வது அவசியமாகிறது. எனவேதான் உலக சபைகளின் (World Council of Churches) கூட்டமைப்பும்கூட திருமரபின் அவசியத்தை வலியுறுத்துகிறது

(**Montreal World Conference on Faith and Order in 1963**, எண்கள் 38-73, குறிப்பாக, எண் 50). இப்பின்புலத்தில், "திருவிவிலியம் மட்டுமே போதுமானது" (*Sola Scriptura*) என்று சீர்திருத்த சபையார் கூறுவது ஏற்கத்தக்கதா என்று மறுசீராய்வு செய்வது நம்முடைய கத்தோலிக்க நம்பிக்கையை ஆழப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

திருமரபும் திருவிவிலியமும் நெருங்கிய பிணைப்பும் தொடர்பும் கொண்டவை. இரண்டும் இறைவனிடமிருந்தே வருகின்றன. ஒரே குறிக்கோளை நாடிச் செல்கின்றன. தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட திருவிவிலியம் இவைனின் வாய்மொழியாயிருக்கின்றது. திருமரபானது இறைவார்த்தையை முழுமையாக எல்லாத் தலைமுறையினருக்கும் வழிவழியாக அளிக்கிறது. அவ்விறைவார்த்தையை அவர்கள் பற்றுறுதியுடன் காக்கவும் விளக்கவும் பரப்பவும் வேண்டுமென்பதே அதன் நோக்கும். வெளிப்படுத்தப்பட்ட இறைவார்த்தையை திரு அவை திருவிவிலியத்திலிருந்து மட்டும் பெறுவதில்லை. எனவே திருமரபையும் திருவிவிலியத்தையும் சமமாக வைத்துப் போற்ற திரு அவை அழைக்கிறது ("இறைவெளிப்பாடு**,"** எண் 9).

## *திருமரபு, திருவிவிலியம், திருஅவையின் ஆசிரியம்*

திருமரபும் திருவிவிலியமும் திருஅவையும் ஒப்படைக்கப்பட்ட ஒரே திருக்களஞ்சியம். எழுதப்பட்ட அல்லது மரபு வழி வந்த கடவுளின் வார்த்தைக்கு அதிகாரப் பூர்வமான விளக்கம் கொடுக்கும் பொறுப்பு திரு அவையின் உயிருள்ள ஆசிரியத்திடம் (Magisterium) ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், திரு அவையின் ஆசிரியம் இறைவார்த்தையின் பணியாள் மட்டுமே. திருமரபும் திருவிவிலியமும், திருஅவையின் ஆசிரியமும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன. ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாது ("இறைவெளிப்பாடு**,"** எண் 10).

அருள்பணி
ச. ஸ்தனிஸ்லாஸ்